செய்தி வெளியீடு எண்:107 நாள்:19.05.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

## கொரோனா 2–ம் அலையினை எதிர்கொள்ள மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கலந்தாலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில், கொரோனா நோய்த்தொற்று 2–ம் அலையினை எதிர்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை, 10வது தளத்தில் இன்று 19.05.2021 மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் பல்வேறு சேவைகளான கொரோனா நோய்த் தொற்று தடுப்பு, நோய் பரவல் தடுப்பு மற்றும் நிவாரண விநியோகம், நோயாளர் பராமரிப்பு, ஆம்புலன்ஸ் சேவை, இறுதியடக்க சேவைகள் ஆகியவற்றினை குறிப்பிட்டு பாராட்டினார். அத்துடன் கோவிட் இரண்டாம் பேரலையின் தாக்கத்தை எதிர்கொள்ள தமிழக அரசு மற்றும் அரசுத்துறை நிறுவனங்களுடன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கரம் கோர்த்து, தோளோடு தோள்நின்று எதிர்கொண்டு களத்தில் நின்று ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என தன்னார்வ தொண்டு நிறுவனங்களை கேட்டுக் கொண்டார். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அதிக

எண்ணிக்கையில், தன்னார்வத் தொண்டர்களை களத்தில் இறக்கி பணியாற்றவும், நோயாளர்களுக்கும், வாழ்வாதாரம் இழந்த தொழிலாளர்களுக்கும் உணவுப் பொருட்கள் தடையின்றிக் கிடைத்திட சேவைகளை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார். சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைந்து, காய்ச்சல் முகாம்கள் நடத்துதல், நோயாளிகள் தொடர் கண்காணிப்பு, ஆற்றுப்படுத்துதல், போக்குவரத்து, ஆம்புலன்ஸ் வசதிகளை ஏழை எளிய நோயாளிகளுக்கு ஏற்படுத்தித் தருதல் போன்ற பிற பணிகளிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முழு வீச்சில் களப் பணியாற்றி, நோயில்லாத் தமிழகம் படைக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு துணை நிற்கக் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் களத்தில் சிறப்பாகப் பணியாற்றி வரும் 27 தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டன. அவற்றில் 19 தொண்டு நிறுவனங்கள் நேரிலும், 8 தொண்டு நிறுவனங்கள் இணைய வழி தளம் மூலமும் பங்கேற்றன. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சார்பில் பல்வேறு நல்ல ஆலோசனைகளும், கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. தொண்டு நிறுவனங்களின் கருத்துக்களை ஆழமாகவும், பரிவாகவும் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா 2–ம் அலை என்னும் பேரிடரை தமிழ்நாடு அரசும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் ஒருங்கிணைத்து செயல்பட ஒரு ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. P. கீதா ஜீவன் அவர்கள் நன்றியுரை நல்கினார். இந்நிகழ்வில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரிய கருப்பன் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, திரு. S.கிருஷ்ணன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, திரு. J. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அரசு முதன்மை செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, திரு. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அரசு செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மற்றும் சமூக நலன், சமூகப் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் துறை ஆணையர்கள் திரு. ஆபிரகாம், இ.ஆ.ப., திரு.லால்வேனா, இ.ஆ.ப., திருமதி. கவிதா, இ.ஆ.ப., உள்ளிட்ட அலுவலர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**